1996 பிப்ரவரி 16]

29—

விவசாயிகளுக்கு மாடு வழங்குதல்

* 19427—**திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விவசாயிகளுக்குப் பால் மாடுகள் வாங்க கடன் வழங்குவதற்குப் பதில், தரமான பால் மாடுகளை அரசே வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கறவை மாட்டுக்கடனுக்குப் பதிலாக கறவை மாடுகளையே அரசு வாங்கி விநியோகம் செய்யும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இரண்டு போகமும் செழிப்பாக வளருவதால் புல், வைக்கோல் போன்றவை நிறைய உள்ளன. நல்ல தரமான மாடுகள் கிடைப்பதாக இருந்தால், அங்குள்ள விவசாயிகள் சிறப்பான முறையில் அந்த மாடுகளிலிருந்து பால் உற்பத்தி செய்து அவர்கள் வாழ்க்கைத் தரம் சிறப்பாக நடக்கும். ஆனால் இப்போது நாம் கொடுக்கிற கடன் தொகையை வைத்து நல்ல தரமான மாடுகளை வாங்க முடியாமல், கூடுதலாகப் பணம் போட்டு மாடுகளை வாங்குகிறார்கள். சிலர் கடன் பணத்தில் வாங்கிய மாடுகளை எல்லாம் திருட்டுத் தனமாக விற்று விடுகிறார்கள். அப்படியும் நடக்கிறது. ஆகவே கருணைகூர்ந்து, நல்ல தரமான மாடுகள் வாங்குவதற்குக் கூடுதல் பணம் கடனாகக் கொடுக்க, தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 4,500 ரூபாய் கடனாக வழங்கி வந்தோம். இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசாங்கம் 6,000 ரூபாய் கடன் வழங்கிக் கொண்டிருக்கிறது. இதுவே தற்சமயம் போதுமானது என்று கருதுகிறோம்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடன் கூடுதலாக வழங்கப்படுகிறது என்று சொன்னதற்கு நன்றி. எங்கள் மாவட்டம் மாடுகளை வளர்க்க வசதியாக உள்ள மாவட்டம். இங்கே இதுவரையில் பால் பண்ணை எதுவும் இல்லை. என்னுடைய திருவட்டார் தொகுதியில் பேச்சிப்பாறை பெருஞ்சாணி போன்ற அணைகள் இருக்கின்றன. அவற்றின் பக்கத்தில் நிறைய புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அங்கே ஒரு பால் பண்ணையை கருணைகூர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அமைத்து அங்கேயுள்ள விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி.சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பால் மாடு வாங்க கடன் வழங்குவதற்குமுன் அவர்களில் பால்கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு மட்டும் பால் மாடு வாங்க கடன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர் களாக இருப்பவர்களுக்குத்தான் கடன் கொடுக்க முடியும். திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பால் மாடுகள் வாங்க கடன் வழங்குவதற்கு பதில் தரமான பால்மாடுகளை அரசே வழங்க முன்வருமா என்ற கேள்வியில் இப்போது நாம் கடன் கொடுத்து விவசாயிகளுக்கு மாட்டை வாங்குவதற்கு உதவுகிறோம். அதுவல்ல பிரச்சினை. அரசே, அதாவது கூட்டுறவு துறை மூலமாகவோ, கால்நடை வளர்ப்புத் துறை மூலமாகவோ நல்ல ஜாதி மாடுகளை, சிந்தி ஜெரிசி போன்ற மாடுகளைத் தந்து, நமது பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு முன்வருமா என்பது உறுப்பினர் அவர்களின் கேள்வியாகும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விடை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் கேட்ட அதே கேள்வியைதான் இவரும் கேட்கிறார். அதற்கு ஏற்கெனவே பதில் அளித்து இருக்கிறேன்.